வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்: 4177 /ஆ4/ 2024, நாள் 24.01.2025

பொருள் : படிப்புதவித் தொகைத் தேர்வுகள் – ஆன்லைன் பதிவேற்றத்தின்போது மாணாக்கர்களின் இனம் (Community). பிறந்த தேதி (Date of Birth) மற்றும் மாற்றுத் திறனாளி (PH candidate) விவரங்களில் சரியான பதிவுகளை மேற்கொள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்களுக்கு தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை : அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.018922/டி3/2024 நாள் 24.01.2025

பார்வையில் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகளின் படி அரசுத் தேர்வுத் துறையால் ஆண்டுதோறும் NMMS, TNCMTSE, TTSE, TRUST போன்ற பல்வேறு படிப்புதவித் தொகைத் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. பள்ளித் தலைமை ஆசிரியர்களால் பதிவேற்றம் செய்யப்படும் மாணாக்கர்களின் விவரங்களைக் கொண்டு தெரிவுப் பட்டியல் (SELECTION LIST) அரசுத் தேர்வுத் துறையால் வெளியிடப்படுகிறது.

பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்களால் பதிவேற்றம் செய்யப்படும் மாணாக்கர்களின் விவரங்களின் அடிப்படையில், மிக முக்கியமாக இனம்(Community). பிறந்த தேதி (Date of Birth) மற்றும் மாற்றுத்திறனாளி (PH candidate) ஆகிய விவரங்கள் குறிப்பாக NMMS, TNCMTSE படிப்புதவித் தொகைக்கு மாணாக்கர்களை தெரிவு செய்வதற்கான(Selection List) முக்கிய காரணிகளாய் அமைகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தெரிவுப் பட்டியல் (Selection list) வெளியிட்ட பின்னர், இனம்(Community). பிறந்த தேதி (Date of Birth) மற்றும் மாற்றுத் திறனாளி விவரங்களில் திருத்தங்கள் கோரி பள்ளித் தலைமை ஆசிரியர்களிடமிருந்து முறையீடுகள் பெறப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக அனுப்பப்படும் முறையீடுகள், ஏற்கனவே வெளியிடப்பட்ட தெரிவுப் பட்டியலை மாற்றம் செய்ய வேண்டிய நிலையினை உருவாக்குகிறது. பல நேரங்களில், படிப்புதவித் தொகை பெறுவதற்கு ஏற்கனவே தெரிவுப் பட்டியலில் இடம் பெற்ற மாணாக்கரை, தெரிவுப் பட்டியலிலிருந்து நீக்கம் செய்து, புதிய ஒருவரை தெரிவுப் பட்டியலில் இடம்பெறச் செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. நீக்கம் செய்யப்பட்ட மாணவருக்கு மனதளவில் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

எனவே, படிப்புதவித் தொகைத் தேர்வெழுத மாணாக்கர்களை சமர்ப்பிக்கும் பள்ளிகள் ஆன்லைனில் தேர்வர்களின் மாணாக்கர்களின் விவரங்களைப் பதிவேற்றம் செய்யும்போது, இனம்(Community). பிறந்த தேதி (Date of Birth) மற்றும் மாற்றுத் திறனாளி (PH candidate) விவரங்களில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

அதேபோல், ஒரே பெயரைக் கொண்ட இரு மாணாக்கரில், விண்ணப்பித்த மாணாக்கருக்கு பதிலாக விண்ணப்பிக்காத மாணாக்கரின் விவரங்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்வதும், புகைப்படம் மாற்றி பதிவேற்றம் செய்வதும், நடைபெறுகிறது. இவ்வாறான வரவேற்கத்தகாத செயல்கள், மாணாக்கர்களின் சரியான விவரங்களை பதிவேற்றம் செய்வதில் பள்ளியின் கவனக்குறைவினையும், அலட்சியத்தையும் காட்டுகிறது.

எனவே, தெரிவுப் பட்டியல் வெளியிட்ட பின்னர், திருத்தங்கள் கோரும் முறையீடுகளைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் அறவே தவிர்க்கும்வகையில், ஆன்லைனில் பதிவேற்றம் செய்யும்போதே மேற்குறிப்பிட்ட விவரங்களில் சரியான பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

இவ்வறிவுரையை பின்பற்றுமாறு அனைத்து வகை அரசு மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

//ஓம்.செ.மணிமொழி //
முதன்மை கல்வி அலுவலர்
வேலூர்.

பெறுநர்,

அனைத்து வகை அரசு மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்கள் வேலூர் மாவட்டம்.

நகல்:

1. வேலூர் மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை/தனியார் பள்ளிகள்/ தொடக்கக்கல்வி ) – தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.
2. வேலூர் மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் – தகவலுக்காக அனுப்பப்படுகிறது.